ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2017/40 - 2017 මැයි මස 05 වැනි සිකුරාදා - 2017.05.05

*2017/40 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

*எனது இல.: 2/2/1(1)(மினு்ம்)-31/2016.*
*காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/7/2016/எச்டப்ளிவ்/187.*

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், கம்பஹா பிரதேச செயலாளர் பிரிவில், இல. 216ஏ, ஹொரகொல்ல தெற்கு கிராம சேவகர் பிரிவில் உள்ள, ஹொரகொல்ல கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை அதிபதி சார்பாக கம்பஹா மாவட்ட நில அளவை அத்தியட்சகரினால் 2017.04.11 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட கடத்திரல் வரைப்பட இல. 511803 கொண்டதுமான தொகுதி இல. தொகுதி 05 இன் 1 ஆவது தொகுதி, தாள் இல. 2, துண்டு இல. 65 தொடக்கம் 70 வரை விபரிக்கப்பட்டுள்ள 0.1078 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணித்துண்டுகள் விஸ்தரிப்பதற்காக எடுக்கப்படுகின்றது. (காணித் துண்டுகள் 06)

*01.* **துண்டு இல. 65**
காணியின் பெயர்: கஹடகஹலன்த; காணியின் விபரம்: வீட்டுத்தோட்டம்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: சுரேகா குலசேகர, இல. 229, கந்தான வீதி, ஹொரகொல்ல, கணேமுல்லை (43 ஆவது காணித் துண்டின் பகுதி, சுவீகரித்தலுக்கான இறுதிக் கட்ட நடவடிக்கை); விஸ்தீரணம்: 0.0104 ஹெக்டயார்.

*02.* **துண்டு இல. 66**
காணியின் பெயர்: கஹடகஹலன்த; காணியின் விபரம்: வீட்டுத்தோட்டம், நிரந்தரக் கட்டிடத்தின் பகுதி, 30 வயதுடைய தென்னை மரங்கள் 06, 10 வயதுடைய மா மரங்கள் 02, 50 வயதுடைய பலா மரம் 01, 15 வயதுடைய மஹோகனீ மரம் 01 மற்றும் 20 வயதுடைய கலுவர மரம் 01 உள்ளது; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: மினோகா சேனசிங்ஹ த சில்வா, இல. 229ஏ, கந்தான வீதி, ஹொரகொல்ல, கணேமுல்லை (43 ஆவது காணித் துண்டின் பகுதி, சுவீகரித்தலுக்கான இறுதிக் கட்ட நடவடிக்கை); விஸ்தீரணம்: 0.0473 ஹெக்டயார்.

*03.* **துண்டு இல. 67**
காணியின் பெயர்: கஹடகஹலன்த; காணியின் விபரம்: வீட்டுத்தோட்டம், 40 வயதுடைய தென்னை மரங்கள் 08 உள்ளன; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: சுரேகா குலசேகர, இல. 229, கந்தான வீதி, ஹொரகொல்ல, கணேமுல்லை, (43 ஆவது காணித் துண்டின் பகுதி, சுவீகரித்தலுக்கான இறுதிக் கட்ட நடவடிக்கை); விஸ்தீரணம்: 0.0227 ஹெக்டயார்.

*04.* **துண்டு இல. 68**
காணியின் பெயர்: -; காணியின் விபரம்: வீதி; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: கண்டுப்பிடிக்க முடியாது (43 ஆவது காணித்துண்டின் பகுதி, சுவீகரித்தலுக்கான இறுதிக் கட்ட நடவடிக்கை); விஸ்தீரணம்: 0.0068 ஹெக்டயார்.

*05.* **துண்டு இல. 69**
காணியின் பெயர்: கஹடகஹலன்த; காணியின் விபரம்: வீட்டுத்தோட்டம், 30 வயதுடைய தென்னை மரங்கள் 02 உள்ளன; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: ஏ. சுரனி அநுராதா த சில்வா, இல. 321, அருண மாவத்தை, ஹொரகொல்ல, கணேமுல்லை, (43 ஆவது காணித் துண்டின் பகுதி, சுவீகரித்தலுக்கான இறுதிக் கட்ட நடவடிக்கை); விஸ்தீரணம்: 0.0119 ஹெக்டயார்.

1A - G 25523 - 57 (2017/5)
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

06. **துண்டு இல. 70**

காணியின் பெயர்: கஹடகஹலன்த; காணியின் விபரம்: வீட்டுத்தோட்டம், 20 வயதுடைய தென்னை மரம் 01 உள்ளது; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: கே. எம். அசினி அநுராதா, இல. 177/பீ1, கந்தான வீதி, கலஹிடியாவ, கணேமுல்லை, (43 ஆவது காணித் துண்டின் பகுதி, சுவீகரித்தலுக்கான இறுதிக் கட்ட நடவடிக்கை); விஸ்தீரணம்: 0.0087 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆண்டு மே மாதம் 12 ஆந் திகதி மு. ப. 09.30 மணிக்கு கம்பஹா பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் அதிகாரி,
கம்பஹா.

பிரதேச செயலகம்,
கம்பஹா,
2017, ஏப்பிறல் 24.

5-581